JUDICIAL FORM NO.53

{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC/ 132 /2021 |
| | : | Prosecution P.W – 2 |
| NAME | : | மங்களம் |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the 13.11.2025.

முதல் விசாரணை

நான் தற்போது சுந்தரேசபுரத்தில் உள்ள முகாமில் குடியிருந்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். பக்கத்து வீட்டுக்காரர்கள். அசா.1 இலங்கேஸ்வரி என் மருமகள். சாட்சிகள் ஜெகஜோதி, சண்முகேஸ்வரன் ஆகியோர்களை தெரியும். தேதி, மாதம் நினைவில்லை. கடந்த 4 வருடங்களுக்கு முன்பு காலை 9.00 மணியளவில் அசா.1ன் வீட்டிற்கு அருகில் அசா.1ன் கணவரை லாரியை எரித்தவர்கள் கெட்ட வார்த்தைகளால் பேசினார்கள். பின்னர் அவர்கள் இருவருக்கும் தகராறு நடந்தது. பின்னர் என் மருமகளை கம்பை கொண்டு அடித்தார்கள். அவர் பெயர் எனக்கு நினைவில்லை. அவரின் பெயர் சதீஸோ, சஞ்சேயோ

என்று நினைக்கிறேன். அந்த நேரம் கொரோனா காலக்கட்டம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பிற்கு காலஅவகாசம் வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53

{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC/ 132 /2021 |
| | : | Prosecution P.W – 1 |
| NAME | : | இலங்கேஸ்வரி |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the 13.11.2025.

முதல் விசாரணை

நான் தற்போது போகநல்லூர் முகாமில் குடியிருந்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். பக்கத்து வீட்டுக்காரர்கள். சாட்சிகள் மங்களம், ஜெகஜோதி, சண்முகேஸ்வரன் ஆகியோர்களை தெரியும். 04.06.2019ம் தேதி என் கணவருடைய டாரஸ் லாரியை ரோட்டில் விட்டிருந்தோம். சஜி, சஞ்சேய், காசிநாதன் ஆகிய 3 நபர்கள் டாரஸ் லாரியை மண்ணெண்ணெயை ஊற்றி எரித்து விட்டார்கள். வண்டி எரியவும் சத்தம் போட்டு பக்கத்தில் வீட்டில் இருந்த நபர்கள் அனைவரும் தண்ணீரை ஊற்றி எரிந்து கொண்டிருந்த வண்டியை அணைத்தோம். காவல் நிலையத்தில் நடந்த சம்பவத்தை சொன்னோம். காலையில் புகார் கொடுத்தோம். மேற்சொன்ன 3 நபர்கள்தான் தீ வைத்ததாக போலீசார் சொன்னார்கள். பின்னர் 5 மாதம் எந்த பிரச்சனையும் இல்லாமல்

இருந்தார்கள். பின்னர் நான் செல்லும்போதேல்லாம் எதிரியின் குடும்பத்தை சேர்ந்தவர்கள் என்னை பார்த்து கெட்ட வார்தையால் பேசினார்கள். கடந்த 20.04.2020ம் தேதி காலை 9.15 மணியளவில் எங்கள் வீட்டிற்கு பக்கத்தில் வைத்து எதிரிகள் சஜியும், விஷ்ணும் என்னை பார்த்து தேவடியா, வேச அது, இது என்று சொல்ல முடியாத வார்த்தைகளால் பேசினார்கள். என் வீட்டுக்காரர் அருவாளை எடுத்துக்கொண்டு வெளியே வரும்போது என்னை விஷ்ணு பைப்பை கொண்டு என்னுடைய தலையில் அடிக்கவந்தார். நான் என் கையால் தடுத்தபோது என் இடது கையின் மணிக்கட்டு உடைந்தது. எதிரி சஜி கல்லை கொண்டு தாக்கியதில் எனது வலது கையில் அடிப்பட்டது. பின்னர் காவல் நிலையத்தில் சொல்லி போலீசார் வந்தார்கள். என் கணவர் கையில் அருவாளை வைத்திருந்தால் என் கணவரையும் கைது செய்தார்கள். நான் கடையநல்லூர் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு மேல்சிகிச்சைக்காக தென்காசி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். பின்னர் எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்க சொக்கம்பட்டி காவல் நிலையம் சென்று புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார்மனு நான் கொடுத்ததுதான். அதில் இருக்கும் கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி புகார் மனு அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பிற்கு காலஅவகாசம் வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53

{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC/ 132 /2021 |
| | : | Prosecution P.W – 3 |
| NAME | : | ஜெகஜோதி |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the 13.11.2025.

முதல் விசாரணை

நான் தற்போது சுந்தரேசபுரத்தில் உள்ள முகாமில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். பக்கத்து வீட்டுக்காரர்கள். அசா.1 இலங்கேஸ்வரி என் நாத்தனார். அசா.2 என் அம்மா. தேதி, மாதம் நினைவில்லை. கடந்த 5 வருடங்களுக்கு முன்பு காலை 9.00 மணியளவில் என் தம்பி மனைவி அசா.1 தண்ணீர் பிடித்துக்கொண்டு வந்தார். அப்போது எதிரிகளுக்கும் என் தம்பி மனைவிக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. அப்போது சண்டை வேண்டாம் என்று நான் அழைத்தப்போது எதிரி சஜி ராடைக்கொண்டு என் தம்பி மனைவியின் கையில் அடித்தார். இது சம்மந்தமாக போலீசார்

என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பிற்கு காலஅவகாசம் வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi